ந.க.சி4/14694/2016 மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
நாள்.16.10.2017 கடலூர்.

**பத்திரிக்கைச் செய்தி**

தீபாவளி பண்டிகை எதிர்வரும் 18.10.2017 அன்று கொண்டாடப்படவுள்ளது குறித்து கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு வடநேரே.இ.ஆ.ப அவர்கள் மாவட்டத்தில் விபத்தில்லா மற்றும் பாதுகாப்பான தீபாவளியை கொண்டாட பொதுமக்களுக்கு வேண்டுகோள்:

மாவட்டத்தில் பட்டாசுக் கடைகளை முறையான உரிமம் பெற்ற பின்னரே வைக்க வேண்டும் எனவும், உரிமம் பெறாமல் பட்டாசு கடைகள் வைத்திருப்பதும், மேலும் தள்ளுவண்டிகளில் பட்டாசுகளை விற்பனை செய்வதும், கள்ளத்தனமாக சீன வெடிகள் உள்ளிட்ட வெளிநாட்டு வெடிகள் வைத்திருப்பதும், அதனை விற்பனை செய்வதும் குற்றமாகும். இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

மேலும் பட்டாசு கடைகளில் தேவையான அனைத்து தீ பாதுகாப்பு உபகரணங்களையும், உரிமம் பெற்று கடை நடத்தி வருவோர் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும், உரிமஸ்தலத்தை தவிர சாலைகளிலோ, பொதுமக்கள் நடை பாதைகளிலோ அல்லது பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்களிலோ கடை வைக்கக்கூடாது எனவும் இதில் விதி மீறுவோர்களின் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையை பொதுமக்கள் பாதுகாப்பான முறையில் கொண்டாடுமாறும் வீடுகளில் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் வெடிபொருட்களை விபத்தின்றி கையாள்வதை பெற்றோர்கள் கண்காணிக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது. வீடுகளில் பட்டாசு கொளுத்தும் போது தண்ணீர் நிரப்பிய வாளிகள், மணல் வாளிகள் போன்றவற்றை அருகில் தயார் நிலையில் வைத்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

ஓம்/பிரசாந்த் மு வடநேரே,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர்.

/உ.ந.உ.ப/

அலுவலக மேலாளர் (குற்றவியல்)